Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Reflections on the Status of Women as Depicted in *Madhar Kummi*

**Dr. T. Nisha,** Assistant Professor of Tamil, Research Center, Scott Christian College, Nagercoil-03, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-3515-9639**
**DOI: 10.5281/zenodo.14744950**

## Abstract

"*Madhar Kummi" is one of the popular Sittrillakkiayam books of Tamil literature. It signifies the life and social contribution of women from a Christian perspective. This book is written by J.S. Vethanayagar. Although the book is full of Christian ideas, news about women's literature, dowry abuse and social revival is spread.* "*Madhar Kummi" explains the status of women's lives. According to him, women should not only focus on adorning themselves and showing virtues, he outlines the importance of hospitality in the first line of virtue in this book.* "*Madhar Kummi" appears as a kind of best instructional literature. Literature such as Temmangu, Kummi, Sindhu, and Kirtanai are also classified based on their cultural relevance. Kummi is based on folk songs which is a new type of literature that emerged in the twentieth century. Kummi, Kummipattu, Meippar Kummi, and Nattukummi are very famous types of kummi. Christian religious poets have used folk literary forms of the common people along with the forms of literature for their religious agenda. This article studies the status of women as portrayed in the book* "*Madhar Kummi".*

**Keywords:** *Mathar Kummi*, Status, Women, Decoration, Women, Education.

## References

[1] Ezhilarasi, M.K. "Feministic Perspectives and the Heroic Women in Holy Bible." *International Journal of Tamil Language and Literary Studies*, Vol. 2, Special Issue 3, Vol. 1 February- 2020.
[2] Chitralekha Mounaguru. *Pennilai Sinthanaikal*. Penkal Kalvi Aayvu Nilaiyam, Columbu, 1993.
[3] Vijayalakshmi, T. *Pen Penniyam Pennilai*. Kalasagam. Nagercoil. 2020.
[4] John Samuel, G. *Kirithava Sittrilakkiya Thirattu*. Aasiyavil Niruvanam, Chennai, 2014.
[5] John Samuel, G. *Kiritavat Tamizhylakkiyam*. Homeland Publications, Chennai, 2017.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# மாதர் கும்மி காட்டும் பெண் நிலை சிந்தனைகள்

**முனைவர் தோ. நிஷா,** உதவிப்பேராசிரியர், தமிழாய்வு மையம்,
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி, நாகர்கோவில்-03, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-3515-9639
DOI: 10.5281/zenodo.14744950

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியத்தின் நாட்டுப்புற சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாக விளங்கும் மாதர் கும்மி பெண்களின் வாழ்வையும், சமூக பங்களிப்புகளையும் உணர்த்தும் முக்கிய இலக்கியமாகும். இந்நூலை ஜா.சே.வேதநாயகர் இயற்றியுள்ளார். இந்நூலில் கிறித்தவக் கருத்துக்கள் நிறைந்திருப்பினும் பெண் விடுதலை, வரதட்சணைக் கொடுமை, சமுதாய மறுமலர்ச்சி பற்றிய செய்திகளும் விரவியுள்ளன. பெண்களின் வாழ்க்கைக்குரிய இலக்கணங்களையும், செயல்முறைகளையும் மாதர்கும்மி விளக்குகிறது. பெண்கள் தங்களை அலங்காரம் செய்து கொள்வதை மட்டும் முக்கியப்படுத்தாமல் நற்குணங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும், விருந்தோம்பலின் இன்றியமையாமையையும் இந்நூலில் கோடிட்டுக் காட்டியுள்ளார். அவ்வகையில் கிறித்தவ இலக்கியத்தில் மாதர் கும்மி, அறிவுரை கூறும் இலக்கிய வகையாகச் சிறக்கிறது.*

**திறவுச்சொற்கள்:** *மாதர் கும்மி*, பெண்நிலை, அலங்காரம், பெண்கல்வி, சிற்றிலக்கியம்.

**முன்னுரை**

ஜா.சே. வேதநாயகரால் எழுதப்பட்ட மாதர்கும்மி பெண்களுக்கென்றே இயற்றப்பட்ட முழுநீளக் கும்மி நூலாகும். இந்நூலில் பெண்களின் சிறப்புகள், இல்லொழுக்கம், சீர்திருத்தம், பெண்கள் கல்வி, போன்ற தலைப்புகளில் 300 பாடல்கள் உள்ளன. இந்நூல் பெண்களின் வாழ்வுக்குரிய இலக்கணங்களையும், செயல்முறைகளையும் கும்மிப்பாக்கள் வழிநின்று புலப்படுத்துகின்றது. மாதர்கும்மி காட்டும் பெண்களின் நிலையைச் சித்தரிப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**சிற்றிலக்கியங்களில் கும்மி**

இசை அடிப்படையிலும், சிற்றிலக்கியங்கள் வகைப்படுத்தப்படும், தெம்மாங்கு, கும்மி, சிந்து, கீர்த்தனை போன்ற இலக்கியங்கள் இசை அடிப்படையில் அமைந்தவை ஆகும். நாட்டுப்புறப் பாடல் அடிப்படையில் உருவான கும்மி இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய புதுவகைச் சிற்றிலக்கிய நூலாகும். முனைவர் சிலம்பு நா. செல்வராசு என்பவர் எழுதிய 'இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள்' என்னும் நூலில் நானூற்றுப் பதினேழு சிற்றிலக்கிய வகைமைகளைப் பட்டியலிட்டுள்ளார். அவற்றில் கும்மி, கும்மிப்பாட்டு, மெய்ப்பர்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

கும்மி, நாட்டுக்கும்மி போன்ற கும்மிகள் இடம்பெற்றுள்ளன. கும்மி என்னும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த நாலு மந்திரி கும்மி என்னும் செய்யுள் நூலை யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் என்பவர் வெளியிட்டுள்ளார். "பிற்கால கிறித்தவ சமய புலவர்களும் சமய பிரச்சாரத்திற்கு சிற்றிலக்கிய வடிவங்களோடு பாமர மக்களின் நாட்டுப்புற இலக்கிய வடிவங்களையும் கையாளத் தொடங்கினர். இக்காலத்தில் எண்ணற்ற கும்மிப் பாடல்களும், தாலாட்டுப் பாடல்களும், கிறிஸ்தவத் திருமறைச் செய்திகளைத் தாங்கி ஏறுநடை பயின்றன." (ஜான் சாமுவேல், ஜி., கிறித்தவத் தமிழிலக்கியம், ப. 116). வேதநாயக சாத்திரியாரும் சிற்றிலக்கிய கும்மி பாடல்களைப் பாடியுள்ளார்.

**மாதர்கும்மி**

மாதர்கும்மி நூலின் ஆசிரியர் ஜா.சே. வேதநாயகர் ஆவார். இவர் தமிழிலக்கியப் பணியும், சமயப்பணியும் ஆற்றி வந்த கிறித்தவத் தமிழறிஞர். இவருடைய 11 படைப்புகள் நூல்களாக வெளிவந்துள்ளன. மாதர்கும்மி, ஆடவர் கும்மி, நித்தியானந்தக் காதல், அமலகுரு சதகம், சற்குரு சதகம், நெஞ்சுருவு கட்கம் போன்றவை குறிப்பிடத் தகுந்த நூல்களாகும். **"வேதநாயக சாஸ்திரியாரைப் போலவே கிறிஸ்துவின் மீது அன்பு கொண்ட ஜா.சே. வேதநாயகரை எளிய நடையைக் கையாண்ட மக்கள் கவிஞர் எனலாம்."** (ஜாண் சாமுவேல் ஜி., கிறித்தவச் சிற்றிலக்கியத் திரட்டு, ப. 333) இவரால் எழுதப்பட்ட மாதர்கும்மி பெண்களுக்கென்றே எழுதப்பட்ட நூலாகும்.

**பெண்கள் சிறப்பு**

வேதங்களிலும் இலக்கியங்களிலும் பெண்ணடிமைக் கூறுகள் கட்டமைக்கப்பட்டுத் திணிக்கப்பட்டுள்ளன. "**பெண் என்றால் அவளின் உடலை மட்டும் மதிப்பீடு செய்து வர்ணிக்கின்ற போக்குகள் பெரும்பாலான இலக்கியங்களில் காணப்படுகின்றன" (எழிலரசி).** இந்நிலையை மாற்றும் விதமாக வேதநாயகன் பெண்கள் வீணான ஆடம்பரத்திற்கு இடங்கொடாமல் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி வாழ வேண்டும் என்று கூறுகிறார். . அலங்காரங்களை செய்தும் அறிவில் குறைந்த பெண் பன்றி பொன் மூக்குத்தி அணிந்ததைப் போன்றிருப்பாள். காதில் இடங்கொள்ளாமல் போகுமளவுக்கு நகைகளை அணிவதைவிட ஏழைகளின் துயரங்களைக் கேட்பது நல்லது. கற்பு என்னும் நல்ல அணியை அணிந்து நற்புத்தியோடு பெண்கள் விளங்க வேண்டும். மோதிரங்கள் போடுவதை விட பிறருக்கு அறம் செய்வதே சிறந்தது என்பதை,

**சிறக்க மோதிரங்கள் போட்டுக் கையைச்**
**சிங்காரமாகவே வைப்பதிலும்**
**அறப்பிசினித்தனஞ் செய்யுங்கையை**
**அறுத்தெறிவாயடி மாதரசே (கி.சி.தி., ப. 391)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்று பாடியுள்ளார். அத்தர்கள், பன்னீர் போன்றவற்றால் வாசனை ஏற்படுத்துவதை விட நற்புத்தியோடு வாழ்வதே சிறந்தது என்பதை,

**அத்தர்கள் பன்னீர் பரிமளவாசனை**
**அன்றைக்கடுத்தவர்க்கே மணக்கும்**
**புத்திநற்புத்தி இப்பூமி முழுதும் எப்**
**போது மணக்குமே மாதரசே (கி.சி.தி., ப. 391)**

என்று எடுத்துரைக்கிறார். பெண் அலங்காரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட தைரியமான பெண்ணாக பொதுவெளியில் இயங்க வேண்டும் என்பதையும் தெளிவுப்படுத்துகிறார்.

**இல்லொழுக்கம்**

குடும்பங்களில் பெண்களின் பங்கு முதன்மையானதாகும். **"குடும்பம் என்னும் மனிதச் சமூக அலகில் பெண் என்பவள் பல உறவு வடிவங்களில் அதாவது மகள், மனைவி, தாய், சகோதரி, பாட்டி என்னும் பல நிலைகளில் செயல்படினும், அவர்கள் அனைவரையும் பெண்ணெனும் ஒற்றை வடிவத்தில் வைத்துக் காணமுடியும்." (விஜயலட்சுமி த., பக். 80, 81)** பெண்கள் குடும்பத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் மாதர்கும்மி ஆசிரியர் பட்டியலிடுகிறார். கணவன் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்ட வேண்டும். திருமண உறவில் கூட்டி இணைக்கப்பட்ட கணவன் மனைவி இருவரும் எவ்வாறு வாழவேண்டுமென்பதை,

**ஒரே மாமிசமாயொரு உள்ளமாய்**
**உற்றவர் வாழ்க்கையில் ஆனந்தமாம்**
**நேருமிருவரில் உண்மைப் பாதங்கள்**
**நிந்தையடிமுத்து மாதரசே (கி.சி.தி., ப. 394)**

என்று கூறுகிறார். குடும்பங்களில் ஒற்றுமையைக் கடைபிடித்து செயல்பட வேண்டுமெனவும் கூறுகிறார்.

**பெண் கல்வி**

வேதநாயகர் பெண் கல்வியினால் ஏற்படும் நன்மைகளையும் விவரிக்கிறார். தாய் கல்வி கற்றிருந்தால் குழந்தைகளும் கல்வி கற்று ஒழுக்கத்துடன் விளங்குவர். பொய்யான கல்வி புலால், கொலை, இலஞ்சம், பொய், சிற்றின்பம் போன்றவற்றிற்கு வழிவகுக்கும் மெய்யான கல்வி இந்த உலகத்திலும் மேலுலகத்திலும் என்றும் மேன்மையைத் தரும் பெண்கல்வியின் அவசியத்தை,

**பேதைமை என்பது மாதர்க்கணியென்ற**
**பேச்சைநீ முற்றிலும் தள்ளிவிடு**
**மேதையராகச் சுகித்தலுலகுக்கு**
**மேன்மையடிமுத்து மாதரசே**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**பெண்கள் படித்தெந்தச் சீமையை ஆண்டிடப்**
**போறாரென்றே கேலிபண்ணாமல்**
**கண்களநேக முடையவளாகக்**
**கருதடியோமுத்து மாதரசே**
**பெண்புத்தி பின்புத்தி என்றுலகோருனைப்**
**பேசுமிகழ்ச்சியைத் தானகற்ற**
**மண்புத்தியோதிடு மந்திரிபோலவே**
**வாழ்ந்திடுவாயேடி மாதரசே (கி.சி.தி., ப. 394)**

என்னும் வரிகளில் எடுத்தியம்புகிறார். பெண்கள் கல்வி கற்று அதிகார முடையவர்களாக சமூகத்தில் இயங்க வேண்டும் என்னும் கருத்து பெண் விடுதலை உணர்வினை பிரதிபலிக்கிறது. ஆனால் பெண்கள் கல்வி கற்றாலும் இன்னும் சரியான அங்கீகாரம் இல்லாமல் இருக்கின்றனர்.

**இன்னும் பெண்கள் ஆண்களுக்கு கீழ்ப்படிவு உடையவர்களாகவும், ஆணைச்சார்ந்து வாழ வேண்டியவர்களாகவும் கருதப்படுகின்றனர். மனைவி, தாய் ஆகியவையே பெண்ணுக்குரிய இயல்பான பாத்திரங்களாகக் கொள்ளப்படுகின்றனர். இந்த நிலை இன்னும் தொடர்வதால்தான் எவ்வளவு கல்வி கற்பினும் வெளியில் போய் செய்யினும் பெண்களது இந்நிலைமை, நிறுவனங்களில் அவர்களால் பிரதிநிதித்தப் படுத்தப்படுவதில்லை (சித்திரலேகா மௌனகுரு, ப. 3)**

மாதர் கும்மியில் நிலையாமைக் கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன. வாழ்வு நிலையில்லாதது என்பதனைப் பல பாடல்களின் மூலம் ஆசிரியர் விவரித்துள்ளார். குறிப்பாக,

**நீரில் குமிழிபோல் மானிடர் வாழ்வு**
**நிலையாது தீவினை தீராது**
**பாரில்மெய்த் தெய்வத்தைப் பற்றிக்கதிபெறப்**
**பாரடியோ முத்து மாதரசே (கி.சி.தி., ப. 404)**

என்னும் பாடலைச் சுட்டலாம். இவ்வாறு வேதநாயகர் மாதர்கும்மி முழுவதும் பெண்களின் வாழ்வு சிறப்பதற்கான கருத்துக்களைக் கூறுகிறார்.

**முடிவுரை**

வேதநாயகரின் மாதர் கும்மி பெண்கள் வாழ்வுக்குத் தேவையான எல்லா கருத்துக்களையும் எடுத்துரைக்கிறது. பெண்கள் தேவையற்ற அலங்காரங்கள் செய்வதை விட சிறந்த விழுமியங்களை வெளிப்படுத்த வேண்டும். குடும்பங்களில் தேவையான கடமைகளை நிறைவேற்ற வேண்டும். கல்வி கற்று குடும்பத்திலும், சமூகத்திலும் சிறந்த பங்களிப்புகளைத் தரவேண்டுமெனவும் சுட்டிக் காட்டுகிறார்.

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

**குறிப்புகள்**

[1] எழிலரசி, மி.க. "விவிலியத்தில் பெண்ணியக் கூறுகளும் வீரப் பெண்களும்" *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*. தொகுதி. 2, சிறப்பிதழ் 3, பிப்ரவரி 2020.

[2] சித்திரலேகா மௌனகுரு, *பெண்நிலை சிந்தனைகள்.* பெண்கள் கல்வி ஆய்வு நிலையம். கொழும்பு, 1993.

[3] விஜயலட்சுமி, த. *பெண் பெண்ணியம் பெண்நிலை*, காலசகம், நாகர்கோவில். 2020.

[4] ஜான் சாமுவேல், ஜி. *கிறித்தவச் சிற்றிலக்கியத் திரட்டு.* ஆசியவியல் நிறுவனம். சென்னை. 2014.

[5] ஜான் சாமுவேல், ஜி. *கிறித்தவத் தமிழிலக்கியம்.* ஹோம்லாண்ட் பதிப்பகம். சென்னை. 2017.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.